Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 1, 2021

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 02, 2021 | ஒளி: 06 கதிர் 064 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## தடுப்பூசி முக்கியம்



கொரோனா தொற்று வேகமாக பரவுவதால் 20 வயதுக்கும் மேற்பட்டவர்கள் நான்காவது கொரோனா தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளல் வேண்டுமென சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. ஒமிக்ரோன் பிறழ்வு மீண்டும் நாட்டில் பரவி வருவதாக விசேட வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார். இதனால் மக்கள் ஒன்றுகூடும் இடங்களிலும் பொதுப்போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும் போதும் முகக்கவசத்தை அணியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# எரிபொருள் விற்ற 1,086 பேர் கைதாகினர்

### 175,000 லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் மீட்பு

சட்ட விரோத எரிபொருள் விற்பனை மற்றும் சேமிப்பு தொடர்பில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 1,164 சோதனை நடவடிக்கைகளில் 1,086 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ, நேற்று (31) தெரிவித்தார்.

இந்த சோதனையில் 37,296 லீற்றர் பெற்றோல் மற்றும் 119,457 லீற்றர் டீசல் மற்றும் 19,214 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# முச்சக்கரவண்டிகளுக்கு முப்பது லீற்றர் வேண்டும்

### சங்கத்தினரால் அரசாங்கத்திடம் கோரிக்கை

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கு வாராந்தம் 30 லீற்றர் பெற்றோல் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கங்கம் தெரிவித்துள்ளது.

வாரத்தில் ஆறு நாட்களுக்கு ஒவ்வொரு முச்சக்கரவண்டிக்கும் நாளாந்தம் 5-6 லீற்றர் எரிபொருளை வழங்குமாறு முச்சக்கர வண்டி தொழிற்சங்கங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் சங்கம் விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

### சீன கப்பல் விவகாரம் சூடுபிடிக்கிறது

# இந்தியா கழுகுப் பார்வை



சீனாவின் விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங்-5, எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட நிறைவாக்குதல் பணிகளுக்காக ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

சீனக் கப்பல் வருகை தொடர்பான செய்திகள் மறுக்கப்பட்டு சில தினங்களுக்கு பின்னர், கப்பலின் வருகையை பாதுகாப்பு அமைச்சு சனிக்கிழமையன்று (30) உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## நுழைய விடாமல் தடுக்க வேண்டும்

முழுச் செய்தி P3

## அனுமதித்து சிரமம் உண்டாக்க வேண்டாம்

இலங்கையில் சீன இராணுவப் பிரசன்னத்துக்கு இடம் கொடுப்பதன் மூலம் இந்தியாவுக்கு நியாயமான தற்காப்புக் கவலையை வழங்கும் என்றும் இலங் அதற்கு இடம்கொடுக்கக் கூடாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேற்று (31) தெரிவித்தது.

தொடர்ச்சி P2

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## ஈஸ்டர் குற்றவாளிகள் சுதந்திரமாக திரிகின்றனர்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் குற்றவாளிகள் என அடையாளங்காணப்பட்ட பலர் தற்போது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும், பொலிஸ் திணைக்களத்தில் உயர் பதவிகளை வகித்துக்கொண்டும் சுதந்திரமாக வாழ்வதாக பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2



## புதிய கொரோனா திரிபு தொடர்பில் எச்சரிக்கை

### தொற்றாளர் எண்ணிக்கை மிக அதிகம் என்றும் அறிவிப்பு

உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய திரிபு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தானது என்றும் மரண வீதம் அதிகரிக்கலாம் என்றும் எச்சரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் விலை குறைகிறது

எரிபொருள் விலை, லீற்றர் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கும் 100 ரூபாய்க்கும் இடையில் மீண்டும் குறைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளனவென எரிபொருள் கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விலை அதிகரிப்பு, இன்று (01) நள்ளிரவு முதல் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் குறைந்துள்ளமைக்கு சமாந்தரமாக,

தொடர்ச்சி P2



## யாத்திரீகர்கள்...

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் வரையிலும் பாத யாத்திரை செல்லும் யாத்திரீகர்களுக்கு இலங்கை கடற்படை உதவிச் செய்துள்ளது.
யாத்திரீகர்கள், குமண தேசிய வனாந்தர நுழைவாயில் இருந்து கும்புக்கனை ஓயா வரையிலும் பயணிக்கும் பாதையில், தேவையான வசதிகளை கடற்படையினர் செய்து கொடுத்தனர்.

## இன்று முதல் கியூஆர் முறைமை மாத்திரம்



தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர கியூஆர் முறைமைக்கு மாத்திரம் இன்றைய தினம் முதல் எரிபொருள் வழங்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். அதிகபட்சமாக சனிக்கிழமை (30) இரவு வரை 1,060 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் கியூஆர் முறைமைக்கு அமைய வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பட்டுள்ளதாக அமைச்சர்,

தொடர்ச்சி P2



## 6.3 மில். இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை

6.3 மில்லியன் இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை என்றும், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ள உலக உணவுத் திட்டம், 6.7 மில்லியன் இலங்கையர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவை உண்பதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

உலக உணவுத்திட்டம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எவரையும் நாங்கள் அச்சுறுத்தவில்லை

சேஹ்ன் செனவிரத்ன

நாட்டின் உயிர்நாடி நாட்டின் பொருளாதாரம் எனவும் அதனை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, அதை சீர்குலைக்கும் தீவிரவாத செயல்கள் மட்டும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் நாங்கள் வேறு யாரையும் அச்சுறுத்தவில்லை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





### தொடர் துப்பாக்கி சூடு

## ஐந்து நாட்களில் ஏழு பேர் பலி

### சனி, ஞாயிறு இருவர் பலி

நாடளாவிய ரீதியில் கடந்த 27ஆம் திகதி முதல் நேற்று (31) வரை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை மற்றும் ரத்கம பகுதிகளில் நேற்று மற்றும் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எரிபொருள் விற்ற 1,086 பேர் கைதாகினர்

175,000 லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், சிலர் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீதான சோதனைகள் தொடரும் என்றும் இதுபோன்ற அனைத்து சம்பவங்கள் குறித்து பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை விழிப்புடன் இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் சட்டவிரோதமாக எரிபொருள் சேமிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட 31 சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். 1,110 லீற்றர் பெற்றோல், 1,441 லீற்றர் டீசல், 9 லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# முச்சக்கரவண்டிகளுக்கு முப்பது லீற்றர் வேண்டும்

அண்மைக்காலமாக அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்தமை தொடர்பில் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் மோசடியில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக சங்கத்தின் செயலாளர் கபில கலபிடகே தெரிவித்தார்.

நாட்டில் 950,000 பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டி சாரதிகள் இருப்பதாகவும் வாரத்தில் ஆறு நாட்களும் இயங்குவதற்கு 5-6 லீற்றர் எரிபொருளைப் பெறுவதை உறுதிப்படுத்துமாறு எரிசக்தி அமைச்சரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, முச்சக்கரவண்டி சாரதிகள் சிரமப்படும் இவ்வேளையில் கட்டண மீட்டர்களை கட்டாயமாக்குமாறு கோருவது நியாயமானதல்ல என்று சங்கத்தின் தலைவர் திரு.லலித் தர்மசேகர தெரிவித்தார்.

ஏனைய பொதுப் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்துவது போன்று, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த விசேட நேரத்திலிருந்து முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு வாரத்துக்கு 5 லீற்றர் வழங்க முடியும் எனவும் தர்மசேகர மேலும் தெரிவித்தார்.

# இன்று முதல் கியூஆர் முறைமை மாத்திரம்

நேற்று (31) டுவிட்டரில் தெரிவித்திருந்தார்.

இதுவரை 1.1 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் QR முறையில் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு சனிக்கிழமை (30) வெளியிட்ட அறிக்கையில் கீழ்க்குறிப்பிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

வாகன இலக்க தகட்டின் கடைசி இலக்கம் மற்றும் டோக்கன் முறை போன்றவை ஒகஸ்ட் 1ஆம் திகதி முதல் செல்லுபடியாகாது என்றும் அன்றையதினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையற்ற நெரிசல் ஏற்படக்கூடிய வகையில் ஒன்று கூட வேண்டாம் என்றும் அமைச்சு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்ட விரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருப்பவர்கள் தொடர்பான ஆதாரங்கள் மற்றும் தகவல்களை 0742123123 என்ற வட்சப் எண்ணுக்கு அனுப்பலாம் என்றும் அவர்கள் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டால், அவர்களின் கியூஆர் குறியீடு செல்லுபடி அற்றதாக்கப்படும் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சேஸ் எண்ணின் மூலம் கியூஆர் முறைமைக்கு பதிவு செய்ய முடியாத வாகனங்கள் வாகன ஆண்டு வருமான அனுமதிப்பத்திர இலக்கத்தைக் கொண்டு பதிவு செய்ய அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து ஓட்டோக்களும் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து, அவற்றுக்கு ஒதுக்கப்படும் அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் விவரங்களை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தேவைப்படும் உபகரணங்களின் உரிமையாளர்கள் தங்களது பிரதேச செயலகத்தில் எரிபொருளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நிரப்பு நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதே வேளையில், பஸ்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு, அவற்றின் வழித்தட அனுமதி மற்றும் பயணித்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை போக்குவரத்து சேவைகள், ஊழியர் போக்குவரத்து, கைத்தொழில்கள், சுற்றுலா தொடர்பான வாகனங்கள், அம்பியூலன்ஸ்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேவைகளுக்கு தேவையான அனைத்து எரிபொருளையும் போக்குவரத்து சபை டிப்போ வழங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அம்பியூலன்ஸ்களுக்கு முன்னுரிமை அளிக்கவும், அவற்றுக்கு வரையறையற்ற எரிபொருள் வழங்கவும் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஸ்டர் குற்றவாளிகள்...

தற்போது நாட்டில் சட்டம் என்று ஒன்றில்லை. சட்டம் என்கிற ஒன்று இல்லாத நிலையே நாட்டில் காணப்படுகிறது இதனை நினைத்து உலகுக்கு முன்பாக வெட்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதிகாரமிக்கவர்களின் சட்டமே நாட்டில் இருக்கிறது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும், இதுவரையில் எதுவும் நடக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பதவிக்கும், பணத்துக்கும் பேராசைக் கொண்டவர்களால் நாடு படுகுழியில் வீழ்ந்துள்ளது. நாட்டு மக்கள் சில நேரங்களில் துன்பப்படுவதற்குக் காரணம் நமது முட்டாள்தனங்களே என மக்கள் சில நேரங்களில் நினைத்துக்கொள்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசி முக்கியம்

அத்துடன், தற்போது நாடளாவிய ரீதியில் நான்காவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதால், இதுவரை தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது சிறந்தது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ. விஜேசூரிய வலியுறுத்தியுள்ளார். கடந்த சில நாட்களாக, கொரோனா தொற்றாளர்கள் மரணிக்கும் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், நேற்று முன்தினமும் (30) ஐந்து கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா கழுகுப் பார்வை

விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள யுவான் வாங் 5 என்ற சீன கப்பல் குறித்த அறிக்கைகள், கடந்த வார ஆரம்பத்தில் புது டெல்லியின் கவனத்துக்கு வந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமது பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு வளர்ச்சியையும் இந்தியா கவனமாக கண்காணிக்கிறது என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் அரிந்தம் பக்சி, வாராந்த ஊடக சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, தனது சட்டபூர்வமான கடல்சார் நடவடிக்கைகளில் தலையிடுவதை சம்பந்தப்பட்ட தரப்புகள் தவிர்க்கும் என்று நம்புவதாக சீனா தெரிவித்துள்ளது என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து இத்தகைய கப்பல்கள் அவ்வப்போது வருகின்றன என்றும் இது ஒன்றும் அசாதாரணமானது அல்ல என்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத் குறிப்பிட்டார்.

எனினும், கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சு ஏன் கப்பலின் வருகையை முன்னதாக மறுத்தது என்பதை விளக்கவில்லை என்று இந்திய ஊடகங்கள் கேள்வியெழுப்பியுள்ளன.

குறிப்பாக 2014 ஆம் ஆண்டு சீனாவின் அணுசக்தியால் இயங்கும் சாங்செங் 2 நீர்மூழ்கிக் கப்பலை துறைமுகத்தில் நிறுத்த கொழும்பு அனுமதித்த பின்னர், கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையிலான கடந்தகால பதட்டங்களைக் கருத்தில் கொண்டு, புவி மூலோபாய ஆய்வாளர்கள் வளர்ச்சியை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அனுமதித்து சிரமம் உண்டாக்க வேண்டாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்ட பதிவிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங்-5 ஒகஸ்ட் 11 ஆம் திகதியன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழையவுள்ளமை அப்பகுதியில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளுக்கு இடையேயான அதிகாரப் போட்டிகள் தொடர்பாக நாங்கள் பக்கச்சார்பாக இருப்பதில்லை என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், இந்தியப் பெருங்கடலில் சீனாவின் இராணுவப் பிரசன்னம் இந்தியாவுக்கு நியாயமான தற்காப்புக் கவலையை வழங்கும் என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சீன இராணுவப் பிரசன்னத்துக்கு இடம் கொடுப்பதன் மூலம் இலங்கை அதை வலியுறுத்தக் கூடாது என்றும் அதை தாங்கள் தொடர்ந்து கூறி வருவதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# புதிய கொரோனா திரிபு...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தெரிவித்த செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

நாளாந்தம் பதிவாகும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை சந்தேகத்துக்கிடமான வகையில் அதிக விகிதத்தில் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாளாந்தம் 100க்கும் 150க்கும் இடையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ள போதிலும், உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் நாளாந்தம் நான்கு அல்லது ஐந்து மரணங்கள் பதிவாகி வருவதாகவும் எதிர்வரும் நாட்களில் பொதுமக்கள் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் எச்சரித்தார்.

மரண விகிதத்துக்கும் தினசரி நோய்த்தொற்றுகளுக்கும் இடையிலான வேறுபாடு இருப்பதாகவும் அனைத்து நோயாளிகளும் சுகாதார அமைப்பு மூலம் கண்டறியப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

பழைய விகாரத்தை விட ஐந்து மடங்கு வேகமாக புதிய விகாரம் எப்படி பரவுகிறது என்று நிபுணர்கள் ஆராய்ந்து வருவதாகவும் புள்ளிவிவரத் தரவைப் பார்க்கும்போது, புதிய விகாரத்தின் பரவல் விகிதம் அதிகமாக இருப்பதாக மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கணிப்புகளைச் செய்ய தரவு போதுமானதாக இல்லை என்றும் நாளாந்தம் அதிகரித்து வரும் வைரஸ் தொற்று காரணமாக மரண வீதம் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

# எவரையும் நாங்கள்...

கண்டிக்கு நேற்று (31) வருகை தந்த புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன, தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் “நாடு எதிர்நோக்கும் சவால்களை முறியடிக்க அனைவரும் கைகோர்க்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதே நமது அரசாங்கத்தின் நம்பிக்கை. ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

அனைத்துக் கட்சிகளையும் கொண்ட அரசாங்கத்தில் இணையுமாறு ஜனாதிபதி பல தடவைகள் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். பிரதமர் என்ற முறையில் நான் பாராளுமன்றத்திலும் அதே அழைப்பை விடுத்தேன். சகல தரப்பினருக்கும் தனித்தனியாக அழைப்பிதழை அனுப்ப ஜனாதிபதி மீண்டும் செயற்பட்டு வருகின்றார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பில் பலரும் பல விடயங்களை வெளிப்படுத்தி விளக்கமளிக்கின்றனர். ஆனால் அரசாங்கம் அவர்களுடன் பரஸ்பர நம்பிக்கையுடனும் நட்புடனும் செயல்பட்டு வருகிறது.

இந்த நாட்களில் ஜனாதிபதியும் நானும் வெளிநாடுகளின் தூதுவர்களை சந்தித்து கலந்துரையாடி வருகிறோம். அவர்களின் ஆதரவையும் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி இருக்க வேண்டும். நாட்டில் சட்டம் ஒழுங்கை அமல்படுத்துவது அனைத்து குடிமக்களின் நலனுக்காகவே. வெளிநாடுகளும் அதை புரிந்து கொள்ள முடியும். பொருளாதாரம் நாட்டின் உயிர்நாடி. அதை சீர்குலைக்கும் தீவிரவாத செயல்கள் மட்டும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. நாங்கள் வேறு யாரையும் அச்சுறுத்தவில்லை“ என்றார்.

# ஐந்து நாட்களில் எழு பேர் பலி

கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், சனிக்கிழமை (30) இரவு நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 51 வயதான நபரொருவர் பலியாகினார்.

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்கம, கம்மத்தேகொட பிரதேசத்தில் நேற்று (31) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் ரி-56 துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்ற நிலையில், படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ரத்கம, தெவெனிகொட பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் 47 மற்றும் 29 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கம்பஹா, அம்பலாங்கொடை மற்றும் ரத்மலானை ஆகிய பகுதிகளில் கடந்த 27 மற்றும் 28ஆம் திகதிகளில் நடத்தப்பட வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஐவர் உயிரிழந்திருந்தனர்.

கம்பஹா நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக 27ஆம் திகதி மதியம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த பாதாள உலகக் குழு உறுப்பினரான ‘பஸ் பொட்டா’ என்று அழைக்கப்படும் சமன் ரோஹித்த, அன்று மாலையும் இன்னொருவர் இரண்டு தினங்களிலும் மரணமடைந்திருந்தார்.

அம்பலாங்கொடை கலகொட பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றில், 27ஆம் திகதி மாலை நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் பலியாகினர்.

இந்நிலையில், இரத்மலானை, சில்வா மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் 28ஆம் திகதி அதிகாலை நுழைந்த இருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 30 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# எரிபொருள் விலை குறைகிறது

உள்நாட்டிலும் எரிபொருள்களின் விலைகளை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், எரிபொருள்களின் விலைகள் 10 ரூபாய்க்கும் 20 ரூபாய்க்கும் இடைப்பட்ட தொகையில் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 6.3 மில். இலங்கையர்களுக்கு...

உணவு மற்றும் நுகர்வுப் பொருட்களின் அதிக விலை காரணமாக உணவு மற்றும் நுகர்வுப் பொருட்களை மிகக் குறைந்த அளவிலேயே கொள்வனவு செய்வதற்கு இலங்கையர்கள் பழகியுள்ளதாகவும் இதனால் இலங்கையர்கள் கடைகளுக்குச் செல்வது அதிகரித்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் எதிர்வரும் 12 மாதங்களுக்கு எரிபொருள் இறக்குமதியை கட்டுப்படுத்துவதால், அன்றாட தேவைகளுக்கு போதுமான பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம் என உலக உணவு திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக இலங்கையர்களுக்கு வேலை தேடும் அல்லது வேலைக்குச் செல்லும் திறன் குறையும் என்றும் பாடசாலைகள் மற்றும் பொதுச் சேவைகளின் இயல்பான செயல்பாடுகள் தடைபடும் என்றும் உலக உணவுத் திட்டம் எதிர்வுகூறியுள்ளது.

சத்தான உணவுகள் மற்றும் காய்கறிகளின் விலைகள் பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் இருந்ததை விட இரண்டு முதல் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உணவு இறக்குமதிக்காக செலவிடப்படும் தொகை மாதாந்தம் 130 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்காக, 20.74 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக உணவுத் திட்டத்திடம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜூலை முதல் டிசெம்பர் வரை 3.4 மில்லியன் இலங்கையர்களுக்கு உதவுவதற்கு, உலக உணவுத் திட்டத்துக்கு 63 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும் 42.3 மில்லியன் டொலர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு

# தமிழ், முஸ்லிம் கட்சிகள் பச்சைக்கொடி

எதிர்க்கட்சியில் உள்ள பல தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றன.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன இக்கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாக அக்கட்சிகளின் பிரதிநிதிகள் உறுதி செய்துள்ளனர்.

பொருளாதார, சமூக ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான சர்வகட்சி அரசாங்கத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.



இதேவேளை ரணிலின் அழைப்பு தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும், கட்சியின் மத்தியச் செயற்குழுக்கூடி இது தொடர்பில் தீரமானம் ஒன்றுக்கு விரைவில் வருமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலாளர் அமில் அலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஷாம் காரியப்பர், விரைவில் தீர்மானம் ஒன்றுக்கு வருவோம் எனவும் தெரிவித்தார்.

அமரகீர்த்தி கொலை;

## உதவியை கோரும் பொலிஸார்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புயை 8 பேரை கண்டுப்பிடிக்க பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 8 பேர் தொடர்பான தகவல்களை 011 251 4217 அல்லது 071 859 2868 என்கிற தொலைபேசி இலக்கங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

மே 9ஆம் திகதி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து நிட்டம்புவ சந்தியில் வைத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல குண்டர்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

## டீசல் இல்லாமையால் நோயாளர்கள் திரும்பினர்

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலை, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அம்பியுலன்ஸ் வண்டியில் அழைத்துச் செல்லப்பட்ட இரு நோயாளர்கள் டீசல் பிரச்சினைகளால் மீண்டும் புத்தளம் வைத்தியசாலைக்குகே கொண்டுச் செல்லப்பட்டுள்ளனர்.

புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு தில்லடியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே எரிபொருள்கள் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில், நோயாளர்களை ஏற்றிச்சென்ற அம்பியுலன்ஸ் வண்டிக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் வைத்தியசாலையின் அதிகாரிகள் பாரதூரமானப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தில்லடியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தொடர்ந்து



அம்பியுலன்ஸ்க்கு எரிபொருள் நிரப்புவதற்கு மறுப்பு தெரிவித்து வருவதாகவும் வைத்தியசாலையின் அதிகாரிகள் தெரிவிப்பதோடு, இதனால் தங்களது பணிகளுக்கும் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் சுமித் என்டன் பெர்ணான்டோ, தில்அடிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பலமுறை எமக்கு எரிபொருள் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் புத்தளம் டிப்போவிலேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

வன்முறை போராட்டக்காரர்களை

## தடை செய்ய முஸ்தீபு

ஜனநாயகத்துக்கு விரோதமாக அரசாங்கத்தின் சொத்துக்களை கைப்பற்றி வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் குழுக்கள், அரசியற் கட்சிகள், அமைப்புக்களை தடை செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

இம்மாதம் 09ஆம் திகதியும் அரசாங்கத்துக்கு எதிரானப் போராட்டங்களை மேற்கொள்ள பல குழுக்கள் தயாராகி வரும் நிலையில், வன்முறைகளில் ஈடுபடும் குழுக்களை தடை செய்வதுத் தொடர்பில் அரசாங்கம் அதிக்கூடியக் கவனம் செலுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது. .

அரச கட்டடங்களை கைப்பற்றுதல், பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற செயற்பாடுகள் பயங்கரவாதச் செயற்பாடுகளாகவே கருதப்படும் என அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் குழுக்கள் அல்லது எந்தவோர் அமைப்புக்களையும் தடை செய்வதுத் தொடர்பான சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இறங்கியுள்ளதாகவும், எவ்வாறாயினும் அமைதியானப் போராட்டக்காரர்கள் மீது இது பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

**தேவை**

வெள்ளவத்தை, கிருலப்பனை மற்றும் பம்பலப்பிட்டிய. காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரையில் திங்கள் முதல் சனி வரையிலும் 35-55 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் சமையலுக்குத் தேவை. பெண்கள் மட்டும் அழைக்கவும் 07603266320

சகல போராட்டங்களில் இருந்தும்

## லிபரல் சகோதரத்துவம் விலகியது

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும், முழு ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு எதிராகவும் மார்ச் மாதம் ஆரம்பத்தில் நாங்கள் நடத்திய அமைதியான போராட்டம் குறுகிய காலத்துக்குள் நாடளாவிய ரீதியில் பரவியது எனத் தெரிவித்துள்ள லிபரல் சகோதரத்துவம், அதற்கு முன்னரும் சமூக ஊடகங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட "கோட்டா கோ கம" போராட்டம் அலைக்கு அடித்தளமிட்டு, காலி முகத்திடல் போராட்டத்துக்கும் பங்களித்திருந்தது எனக் குறிப்பிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறி போது வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் சாதிக்கப்பட்டது என நாங்கள் நம்புகின்றோம். எவ்வாறாயினும் லிபரல் கோதரத்துவம் உட்பட ஏராளமான அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் தலையீட்டில் செய்யப்பட்ட 'beyond galleface" தொடரின் முன்மொழிவுகளில் உள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னரே, இந்த முழுப் போராட்டமும் முடிவுக்கு வரும்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பரந்த அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே இதைச் செய்யமுடியும் என்று நாங்கள் நம்புக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள லிபரல் சகோதரத்துவம், தெருவில் இறங்கி போராடுவதன் மூலம் மட்டுமல்ல என்றும் தெரிவித்துள்ளது.

இந்த செயற்பாட்டுக்காக எமது அமைப்பு அனைத்து அரசியல் சமூகத்துடனும் கலந்தாலோசித்து நாட்டின் பொது நலனுக்காகவும், இந்த நேரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காகவும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான அனைத்து வழிகளிலும் பங்களிக்க எங்கள் அமைப்பு தயாராக உள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலம்பெயர் தமிழர்களை நம்பியிருக்கும் சுற்றுலாத்துறை

இந்திய சுற்றுலாப் பயணிகள், புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்து மீள சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நல்லூர் திருவிழா, எசல பெரஹரா ஆகிய முக்கிய இரு பிரதான நிகழ்வுகளும் இம்மாதம் நடைபெற உள்ளதால், இந்திய சுற்றுலாப் பயணிகள், புலம்பெயர் தமிழர்கள் அதிகளவில் நாட்டுக்கு வருவார்கள் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சாலக கஜபாகு



தெரிவித்துள்ளார்.

நல்லூர் திருவிழாவில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் கலந்துக்கொள்வார்கள் எனவும், 50,000 - 100,000 புலம் பெயர் தமிழர்கள் வருவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும், 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தலதா பெரஹராவில் கலந்துக்கொள்வதற்கு முன்பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

இந்த வருடத்தின் ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும்போது கடந்த மே, ஜூன் மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சிக் காணப்படுகிறது. எனவே இம்மாதம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## பயன்படுத்தப்படாத பில்லியன் ரூபாய்

மருத்துவ உதவிகள், நிவாரணங்களை வழங்குவதற்கான ஜனாதிபதி நிதியத்திடம் 4 பில்லியன் ரூபாய் கையிருப்பில் உள்ளபோதிலும், அந்த நிதி கடந்த இரு வருடங்களாகப் பயன்படுத்தப்படவில்லை என அறிய முடிகிறது.

இந்த நிதியம், கடந்த இரு வருடங்களாக இயங்காமையால் ஜனாதிபதியிடம் சத்திர சிகிச்சைகளுக்காக உதவிகளை கோரியமை உள்ளிட்ட 700 விண்ணப்பங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஜனாதிபதி நிதியத்துக்கான மேலதிக செயலாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, அடுத்த மூன்று மாதங்களில் நிலுவைத் தொகைகளை செலுத்திவிட வேண்டும் என்கிற அறிவுறுத்தலுடன் புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு ள்ளதகாவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரணிலின் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இலங்கை



சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி தனக்கு அழைப்பு விடுக்கவில்லை என தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை வைத்துப் பாரக்கும்போது அரசாங்கத்தின் மீது தனக்கு நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு திருத்தம், பாராளுமன்றத்தில் துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபித்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு ஆலோசனைகளையே தன்னிடம் கோரியுள்ளதாகவும் சம்பிக்க கூறினார். தற்கு விரைவில் தான் பதிலளிப்பேன். எனினும் சர்வகட்சி அரசாங்கத்துக்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. பொதுவான வேலைத்திட்டத்துக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களுடைய அபிப்பிராயங்களைக் கூற வேண்டுமென்றே ஜனாதிபதி தனக்குக் கடிதம் எழுதியிருந்தார் என்றார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை என்றார்.

## இலங்கைக்குள் நுழையவிடாது தடுத்து நிறுத்த வேண்டும்

சீன உளவுக் கப்பலின் வருகையால் இந்தியாவுக்கு ஆபத்து என்றும் அதனை இலங்கைக்குள் நுழையாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



**"இந்தியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எத்தகைய கடினமான நடவடிக்கையையும் எடுப்பதற்கு மத்திய அரசு தயங்கக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**

சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங்-5 என்ற சக்திவாய்ந்த உளவுக்கப்பல் ஒகஸ்ட் 11-ஆம் திகதி இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்து, ஒரு வாரத்திற்கு நிலை நிறுத்தப்பட்டு இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சீன உளவுக் கப்பலின் வருகை, இந்தியாவின், குறிப்பாக தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஜியாங்யின் துறைமுகத்திலிருந்து கடந்த 13ஆம் திகதி புறப்பட்ட யுவான் வாங் கப்பல் தாய்வானைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

ஒகஸ்ட் 11-ஆம் திகதி அந்தக் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அடையும் என்ற தகவல் ஏற்கெனவே வெளியானது. அப்போதே அது குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தது. அப்போது அதை திட்டவட்டமாக மறுத்த இலங்கை அரசு, இப்போது உளவுக்கப்பலின் வருகையை உறுதி செய்திருக்கிறது. இலங்கை அரசின் இந்த தடுமாற்றத்திலிருந்தே சீனக் கப்பலின் வருகை இந்தியாவுக்கு ஆபத்தானது என்பதை உணரலாம்.

சீன உளவுக்கப்பல் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். 750 கிலோமீற்றர் அதிக சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக்கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் சீனக் கப்பலுக்கு உண்டு.

அதாவது கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் யுவான் வாங் கப்பல் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும். அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீன கப்பலின் இலங்கை வருகை தென்னிந்தியாவுக்கு எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவை உளவு பார்க்க சீனா துடிப்பதும், அதற்கு இலங்கை உதவுவதும் இது முதல்முறையல்ல. கடந்த 2014-ஆம் ஆண்டு ஒக்டோபர் 31-ஆம் திகதி சீனாவின் சாங்ஷெங் -2 நீர்மூழ்கிக் கப்பலும், சாங் ஜிங் தாவ் போக்கப்பலும் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து 5 நாட்கள் இந்திய நிலைகளை உளவு பார்க்க முயன்றன.

இலங்கைக்கு கொடுத்த கடனை காரணம் காட்டி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தையும், அதைச் சுற்றியுள்ள 15,000 ஏக்கர் நிலங்களையும் வளைத்து விட்ட சீனா, அங்கிருந்தும் இந்தியாவை உளவு பார்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறது. கடந்த டிசெம்பர் மாதத்தில் இலங்கைக்கான சீனத் தூதர் சென்ஹாங், யாழ்ப்பாணத்திற்கு சென்று, அங்கிருந்து படகு மூலம் இராமேஸ்வரத்தை ஒட்டிய இராமர் பாலத்தின் மூன்றாவது மணற்திட்டு வரை பயணித்து, இந்தியாவை உளவு பார்ப்பதற்கான உத்திகளை வகுத்துச் சென்றிருந்தார்.

அப்போதே சீனாவின் இத்தகைய சதித்திட்டங்களை சுட்டிக்காட்டி, இந்தியா எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என எச்சரித்திருந்தேன். சீனாவின் முந்தைய சதித் திட்டங்களின் தொடர்ச்சியாகவே இதைப் பார்க்க வேண்டும்.

சீன உளவுக் கப்பலின் வருகையை தொடக்கத்தில் மறைத்த இலங்கை அரசு, பின்னர் உண்மை அம்பலமான பிறகுதான் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான சீனச் சதிகளுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் அப்பட்டமாக துணைபோகின்றனர் என்பதற்கு இது தான் சிறந்த உதாரணம்.

சீனக் கப்பலின் இலங்கை வருகை என்பது ஐக்கிய நாடுகள் கடல் சட்ட உடன்படிக்கையை மீறிய செயல் ஆகும். சீனக் கப்பலை இலங்கை அனுமதிப்பது 1987-ஆம் ஆண்டு இந்திய, இலங்கை அமைதி உடன்பாட்டிற்கு எதிரான செயலாகும். அந்த உடன்பாட்டின்படி இலங்கை மண்ணை இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு எதிரான செயல்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

சீனக் கப்பலை அனுமதிப்பது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால் அதை இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இலங்கை இந்தியாவிடமிருந்து கச்சதீவு உள்ளிட்ட ஏராளமான உதவிகளைப் பெற்றுக் கொண்டாலும் கூட, ஒரு நாளும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்ததில்லை. இப்போதும் கூட, கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் இலங்கைக்கு கடந்த சில மாதங்களில் மட்டும் ரூ.32,000 கோடி உதவி வழங்கியுள்ளது.

இவ்வளவுக்குப் பிறகும், இந்தியாவுக்கு எதிராக, சீனாவுக்கு சாதகமாக செயல்படும் இலங்கையை இனியும் நம்ப வேண்டுமா? என்பது குறித்து இந்தியா முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது.

வடக்கில் லடாக் பகுதியில், இந்திய எல்லைக்குள் அடிக்கடி ஊடுருவி தொல்லை கொடுத்து வரும் சீனா, தெற்கில் இலங்கையிலிருந்து தொல்லை கொடுக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இலங்கை என்பது இந்தியாவின் பாதுகாப்புக்கான கேடயமாகத் தான் இருக்க வேண்டுமே தவிர, இந்தியா மீதான தாக்குதலுக்கான தளமாக மாறிவிடக் கூடாது. இதை உணர்ந்து கொண்டு, அதற்கேற்ற வகையில் தான் இந்தியா பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை வகுக்க வேண்டும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரும் 11-ஆம் திகதி வரவிருக்கும் சீன உளவுக் கப்பலை அனுமதிக்கக் கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும். அதையும் மீறி சீனக் கப்பலை இலங்கை அனுமதித்தால், இந்தியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எத்தகைய கடினமான நடவடிக்கையையும் எடுப்பதற்கு மத்திய அரசு தயங்கக் கூடாது" என்று கோரியுள்ளார்.

சர்வகட்சி ஆட்சி அமைக்க விரும்பினால்

# "நாம் வரவேற்போம்"

■ க. அகரன்

"ஒரு சர்வ கட்சி ஆட்சியை அமைக்க விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்தால், அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து விடுபட அது தான் ஒரே வழி. ஆனால் அது உண்மைத் தன்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சுமந்திரன் இவ்வாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தோம். எமது கட்சியின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டில் வந்து எந்தவித குழப்பமும் இன்றி எடுக்கப்பட்ட தீர்மானம். ராஜபக்ஷ குடும்பத்தை அரசியல் இருந்து அகற்ற வேண்டும் என்ற மக்கள் போராட்டம் நடைபெறுகிறது. அது உலகத்திலேயே சிறப்பாக நடைபெற்ற வன்முறையற்ற ஒரு ஆர்ப்பாட்டம். அதன் பிரதிபலனாக ராஜபக்ஷ



குடும்பம் அரசியிலில் இருந்து ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படுறது. ஆனால் உண்மையில் அவர்கள் சற்று ஒதுங்கியிருந்து ரணில் ராஜபக்ஷவை; மன்னிக்க வேண்டும் ரணில் விக்கிரமசிங்கவை நியமித்துள்ளார்கள்.

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துபவர். ராஜபக்ஷவின் ஆட்சியின் நீட்சியாக தான் அதனை பார்க்க முடியும். அதனைத் தடுப்பதாக இருந்தால் டலஸ் அழகப்பெருமவுக்குத் தான் வாக்களிக்க முடியும். மாற்றுத் தெரிவு எதுவும் இருக்கவில்லை.

வேட்பாளர் டலஸ் அழகப்பெருமாளுடன் தமிழ் மக்கள் சந்தித்துள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஒப்பந்தம் செய்திருந்தோம். விசேடமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இணங்கிய 4 விடயங்கள் தொடர்பிலும் உடன்பாடு செய்திருந்தோம். அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான விசாரணையை ஆரம்பித்தல், நில அபகரிப்பை தடுத்தல், விசேட சட்டங்களின் கீழ் நிலங்கள் அபகரித்தலை தடுத்தல் தொடர்பில் அது சொல்லப்பட்டது. இறுதியாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை காண இது வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் பேசியிருந்தோம்.

தற்போதைய ஜனாதிபதிக்கு இது தொடர்பில் சொல்லத் தேவையில்லை. அவருக்கு அது எல்லாம் நன்றாக தெரிந்த விடயம். கடந்த ஆட்சி காலத்தில் இவற்றை நடைமுறைப்படுத்த அவருடன் நாம் சேர்ந்து இயங்கினோம். இதுவெல்லாம் அவருக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. தற்போது ஜனாதிபதிக் கதிரையில் இருப்பதால் வேண்டுமென்றால் மீள ஞாபகப்படுத்தலாம்.

தற்போது இலங்கைக்கு நிதி வழங்குவதலில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள எழ வாய்ப்பே இல்லை. ஆர்ப்பாட்டத்தின் மூலமே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். ஆர்ப்பாட்டம் நடந்திருக்காவிட்டால் இன்று பாராளுமன்றத்தில் தனது கட்சியின் ஒரு தனி எம். பியாக அமர்ந்திருப்பார். அந்த ஆர்ப்பாட்டத்தை உபயோகித்து ஜனாதிபதியாகிவிட்டு அந்த ஆர்ப்பாட்டகாரர்களை வேட்டையாடுவது மிகவும் மோசமான செயல்.

புதுக்குடியிருப்பில்

## மலசலகூடத்துக்குள் இருந்து எரிபொருள் மீட்பு



■ செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குள் எரிபொருள் பதுக்கிவைக்கப்பட்டதான முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் சோதனை மேற்கொண்டு 69 லீற்றர் எரிபொருள்கள் மலசலகூடங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின் அலுவலகம் தங்கமிடத்தில் எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சோதனை செய்தபோது சோதனையில் 69 லீற்றர் எரிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலரின் அலுவலகம் அல்லது இருப்பிடத்தில் எரிபொருள் பதுக்கப்பட்டிருப்பதாக தகவலறிந்த பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் முற்றுகையிட முற்பட்டவேளை சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் பிரதேச செயலகத்தை திறந்து சோதனை நடத்தியுள்ளார்கள்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு

## 'ரணிலுடன் பேச கூட்டமைப்புத் தயார்'

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசத் தயாராகவே நாங்கள் இருக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தில் மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு சிறீதரன் கூறியுள்ளதுடன் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்த மண்ணிலே புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் பேசவோம் அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடும் நாம் பேசுவோம்.

ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 தடவைகள் பேசியிருக்கிறோம். கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஒரு தடவை பேசியிருக்கிறோம். இவ்வாறு இந்த நாட்டில் யார் யார் எல்லாம் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் தமிழர் தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மூன்றாம் திகதியன்று பாராளுமன்றில் தனது அக்கிராசன உரையை நிகழ்த்தவுள்ளார் இவர் தனது அக்கிராசன உரையில் புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிப்பாரா? அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்று அநுராதபுரத்தில் பதவியேற்றபோதும் சரி தனது அக்கிராசன உரையிலும் சரி மக்களால் விரட்டியடிக்கப்படும் வரை தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசாது போன்று இவரும் செயற்படுவாரா எனும் சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது.

40 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் அனுபவத்தை கொண்டுள்ள ஜனாதிபதி இந்த நாடு இப்படி பொருளாதார ரீதியில் அதல பாதாளத்துக்கு போவதற்கு பிரதான காரணமாக இருந்தது ஒரு இனத்தின் மீது நடைபெற்ற போர்தான் என்பதை புரிந்து வைத்திருப்பார்.

மன்னாரில் 40 நாள்களாக

## மீனவர்கள் பாதிப்பு

### கடற்றொழில் அமைச்சரும் அதிகாரிகளும் அலட்சியம் எனக் குற்றச்சாட்டு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் சுமார் 40 நாள்களுக்கு மேலாக மண்ணெண்ணை விநியோகம் இடம்பெறாத நிலையில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத காரணத்தால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் கடற்றொழில் அமைச்சரோ, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளோ, குறித்த விடயத்தில் கரிசனை காட்டுவதாக தெரியவில்லை என பள்ளிமுனை மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாக பொருளாதார நெருக்கடி நிலவி வருகின்ற நிலையில் எரிபொருள் பிரச்சினை காரணமாக மீனவர்கள்



மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில் தாங்களும் தங்கள் குடும்பங்களும் வறுமையில் வாடுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1,000 ரூபாய் கொடுத்து எரிபொருள் பெற்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டாலும் உரிய லாபம் கிடைப்பதில்லை என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் அண்மைய நாட்களாக வாகனங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் இடம்பெறுகின்றது.

ஆனால், மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் எரிபொருள் அமைச்சரோ கடற்றொழில் அமைச்சரோ ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே மீனவர்களுக்கு உரிய எரிபொருள் விநியோகம் சீராக இடம் பெறாத பட்சத்தில் கற்பிட்டி தொடக்கம் கொழும்பு வரை உள்ள மீனவர்கள் படகுகளை வாகனங்களில் ஏற்றி கொழும்பில் உள்ள அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் ஏனைய மீனவர் வீதிகளில் இறங்கி போராட வேண்டி வரும் எனவும் மன்னார் மீனவ சமாச செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

# ஆழ்கடல் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கடற்றொழிலை தங்குத்தடையின்றி, கிரமமாக முன்னெடுப்பதற்கு போதியளவு எரிபொருளை பெற்றுத்தருமாறு கோரி கல்முனைப் பிரதேச ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் நேற்று (31) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை ஆழ்கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை ஹூதா திடலை அண்மித்த கடற்கரைப் பகுதியில் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நஸீர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மீனவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தமது கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக்கொண்டு, கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த பல மாதங்களாக



நிலவி வருகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனைப் பகுதியில் கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதாகவும் கல்முனை மாநகர எல்லையினுள் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருந்தும் கூட கடற்றொழிலுக்காக தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

கல்முனைப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது போதியளவு டீசல் வருகின்ற நிலையில், மீன்பிடிப் படகுகளுக்கென தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும், டீசல் விநியோகத்தின்போது தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்குமாறு கடற்றொழில் திணைக்களத்தின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலாளரினால் சிபார்சுக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் எரிபொருள் நிலையங்களில் அதற்கு மதிப்பளிக்கப்படாமல், பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற மாபியாக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது எனவும் இதன்போது அவர்கள் விசனமும் கண்டனமும் வெளியிட்டனர்.

இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு கடற்றொழில் அமைச்சரும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென மீனவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.



## உகந்தை மலை கொடியேற்றம்

■ சகா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா கொடியேற்ற நிகழ்வு கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கோலாகலமாக இடம்பெற்றது.

ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சுமார் 6 ஆயிரம் அடியார்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்றது. உதவிக்குரு சிவசிறி கோபி சர்மா உதவினார்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க ஏற்பாட்டில் சரியாக காலை 11.20 மணியளவில் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க கொடியேற்றம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

தொடர்ச்சியாக13 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 11-ஆம் திகதி உகந்தைமலை சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

இது இவ்வாறு இருக்க கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்கள் தொடர்ச்சியான மழையால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதுவரை 20 ஆயிரம் அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்து இருக்கின்றார்கள்.

## பேருந்து மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி மொறக்கொட்டாஞ்சேனை விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியால் நடந்து சென்ற இளைஞர் ஒருவரை மோதியதில் சம்பவ இடத்திலே இளைஞர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (30) இரவு 11 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவதினமான நேற்று முன்தினம் மாவடிவேம்பு 2 ஆம் பிரிவைச்சேர்ந்த 27 வயதுடைய வேணுகோபலன் என்பவர் இரவு 11 மணிக்கு வீதியால் நடந்து வந்து கொண்டிருந்தபோது மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை நோக்கி பிரயாணித்த இலங்கை போக்குவரத்து சபைபேருந்து ஒன்று மோதியதில் இளைஞன் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

## விவசாயிகள் டீசலை பெற முடியாத நிலைமை

■ எம்.சி. அன்சார்

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் தற்போது சிறுபோக வேளாண்மை அறுவடை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், உழவு இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றிக்கான எரிபொருளினை (டீசல்) பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் விவசாயிகள் தங்களின் வயல்களில் அறுவடை செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்மாந்துறை மற்றும் மல்வத்தை கமநல சேவைகள் மத்திய நிலையத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் உள்ளதாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் அறிவுறுத்தலுக்கமைய, விவசாயிகளுக்கு கமநல சேவைகள் மத்திய நிலையங்களில் ஊடாக ஏக்கர் ஒன்றுக்கு 15 லீற்றர் வீதம் எரிபொருள் (டீசல்) பங்கீட்டு அட்டை மூலம் விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளன. டீசல் கிரமமான முறையில் வழங்குவதற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதி நவீன கண் சத்திர சிகிச்சை

## உபகரணம் வழங்கி வைப்பு



■ பைஷல் இஸ்மாயில்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் அதி நவீன கண் சத்திர சிகிச்சை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை பொதுமக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஷ் அஷ்ஷூரா, உலமா சபை போன்ற முச்சபைகளின் வழிகாட்டலின் கீழ் பொதுமக்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 1 கோடிக்கு மேற்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திர சிகிச்சை உபகரணங்களை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவர் வைத்தியர் ஏ.இஸ்ஸடீன் தலைமையில் வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு உபகரணத்தொகுதியை வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவிற்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

## 4ஆம் கட்ட கொரோனா தடுப்பூசி

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காம் கட்ட கொரோனா தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று (31) கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் போது பைசர்



தடுப்பூசிகள் ஏற்றப்படுவதாக பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதன் போது பாடசாலை மாணவர்கள், வயதானவர்கள், ஏற்கனவே கொரோனா தடுப்பூசி செலுத்தாதவர்கள், மற்றும் ஆண்கள், பெண்கள் எனப் பலருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

மேலும், நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஹட்டன் நகருக்கு வருபவர்கள்

# முகக் கவசம் அணிவது அவசியமாகும்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கொரோனா தொற்று மீண்டும் வேகமாக இலங்கையில் பரவ ஆரம்பித்துள்ள நிலையில், முகக் கவசங்களை உரியமுறையில் அணியுமாறு, பொதுமக்களிடம் ஹட்டன்-டிக்கோயா நகரசபையின் தவிசாளர் சடையன் பாலசந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர்,

கொரோனா தொற்றிலிருந்து பிரதேசவாசிகளை பாதுகாப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும்.

எனவே ஹட்டன்-டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களும் அதேப்போல் ஹட்டன் நகருக்கு வருகைத் தருபவர்களும் முகக் கவசம் அணிய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் சுகாதார பரிந்துரைகளை கடைபிடிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிக்காத நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

தங்களுடைய பாதுகாப்பு தொடர்பில் கவனத்தை செலுத்தி, முகக்கவசத்தை முறையாக பயன்படுத்துமாறும் சுகாதார தரப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தின் வடிவம் குறித்து

# தெளிவுபடுத்தல் இல்லை

## வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு

■ மொஹொமட் ஆஸிக்

சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பான அழைப்புத ஜனாதிபதியிடம் இருந்து வந்திருந்தாலும் சர்வகட்சி அரசாங்கத்தின் வடிவம் தொடர்பாக எவ்வித தெளிவுபடுத்தலும் இது வரை கிடைக்கவில்லை என்று கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

நேற்று (31) அக்குறணை-ஸாஹிரா தேசிய பாடசாலையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த சர்வகட்சி அரசாங்கம் இன்று இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வை தருமா? எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலே எரிபொருளுக்காக நிற்கின்ற வரிசைகளுக்கு முடிவு கட்ட முடியுமா? என கேள்வி எழுப்பினார.

இதனை நாங்கள் மட்டும் கேட்கவில்லை . சர்வதேசமும் கேட்கின்றது. உலக வங்கி கேட்கின்றது. ஐ.எம். எப் நிறுவனம் கேட்கின்றது. அதைத் தான் நாங்களும் கேட்கின்றோம் என்றார்.

பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்கு அல்லது மக்களின் பிரச்சினைக்கு இந்த சர்வகட்சி அரசாங்கம் தீர்வு தருமாக இருந்தால் அது தொடர்பாக நாங்கள் பேசலாம். அது தொடர்பாக நாங்கள கலந்துரையாடலாம் என்பதையே தாம் ஜனாதிபதிக்கும் இந்த அரசாங்கத்திற்கும் தெளிவு படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பகுதிநேர வகுப்புகள் ஆரம்பம்

பி.கேதீஸ்ஹ

ட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பகுதி நேர கற்கை நெறிகளுக்காக புதிய பயிலுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில் பயிற்சி கற்கை நெறிகளாக அடிப்படை மோட்டார் சைக்கிள் பராமரிப்பு,கையடக்க தொலைபேசி பழுது பார்த்தல், அடிப்படை ஹோட்டல் தொழிற்பாடு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் மொழி பயிற்சி கற்கை நெறிகளாக ஜப்பான் மொழி,கொரியன் மொழி,அடிப்படை ஆங்கிலம்,இரண்டாம் மொழி சிங்களம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் வார இறுதி நாட்களில் நடைபெறும். இக்கற்கை நெறிகளை தொடர வயதெல்லை கிடையாது. 100 சதவீதம் செயன்முறை ரீதியான கல்வியே இங்கு வழங்கப்படும். அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பயிற்சிநெறி தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு வதிவிட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 051- 2223492, 051- 2222762 போன்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.








# சுற்றுச் சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம்...

நுவரெலியா பிரதேச சபையின் சுற்று சூழல் வேலைத்திட்டத்தின் கீழ், நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில், கந்தப்பளை பார்க் தோட்டத்தில் சிரமதான பணிகள் நேற்று (31) மேற்கொள்ளப்பட்டன. ( நீலமேகம் பிரசாந்த்)

இ.தொ.காவின் எதிர்கால

# அரசியல் தொடர்பான கலந்துரையாடல்

■ ஆ. ரமேஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எதிர்கால அரசியல் நிலை தொடர்பான சந்திப்பொன்று, கொட்டகலை சிஎல்எப். கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம்(30) நடைபெற்றது.

இதில் காங்கிரஸின் பொது செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி ராமேஸ்வரன்,நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட உள்ளிட்ட காங்கிரஸின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

இந்த சந்திப்பில் காங்கிரஸின் எதிர்கால அரசியல் நடவடிக்கை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் தோட்டப்பகுதி மக்களுக்கு எதிர்காலத்தில் பெற்றுத்தரக்கூடிய நிவாரண உதவிகள் மற்றும் தமிழ்நாட்டு அரசாங்கத்தினால் இலங்கை மலையக தோட்டப்பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட தோட்டப்பகுதிகளில் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.






நுவரெலியா லயன்ஸ் கழகத்தின்

# புதிய நிர்வாக சபைக் கூட்டம்

■ பி.கேதீஸ்நு

வரெலியா லயன்ஸ் கழகத்தின் 57 ஆவது தலைவராக தெரிவு செய்யப்பட்ட வைத்தியர் திருமதி ஜெயராணி இராஜரட்னத்தின் முதலாவது நிர்வாக சபை கூட்டம் நேற்று முன்தினம் (30 நுவரெலியா சம்பத் ரெஸ்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் பிரதேச தலைவர் சின்னையா பாலகிருஷ்ணன் கலந்துக்கொண்டார்.

இதன்போது 2022ஃ2023 வருடங்களுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் முன்னாள் தலைவர்களும் லயன்ஸ் 302 மாவட்ட முன்னாள் ஆளுநர் நிமால் ரணவக்க நடப்பு வருட புதிய செயலாளர் ஜெகதீஷன் குமரேஷ், புதிய பொருளாளர் ராஜகோபால் குணசேகரன் ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

கழுத்தில் கத்தியை வைத்து

# தங்க நகைகள் கொள்ளை

■ சுமணசிறி குணதிலக

கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி 4,92,000 ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனியவத்த பிரதேச வீடொன்றில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் (30) இரவு 8 மணியளவில் குறித்த வீட்டுக்குள் நுழைந்த இளைஞர்கள் இருவர், வீட்டு உரிமையாளரின் கழுத்தில் கத்தியை வைத்து, அச்சுறுத்தி தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக வெள்ளவாய பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்போவில் கடமையாற்றும் 53 வயதுடைய வீட்டு உரிமையாளர், இரவு 8 மணியளவில் வீட்டுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளதை கண்டு அவர்களிடம் வினவியுள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், தமது மோட்டார் சைக்களில் எரிபொருள் முடிந்து விட்டதாகவும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வெற்றுப் போத்தல் ஒன்று தேவை என்றும் கூறியுள்ளனர்.

இதன்போது குறித்த நபர், போத்தலை எடுப்பதற்காக வீட்டின் பின்புறத்தே சென்ற போது, குறித்த இளைஞர்கள் அந்த நபரின் கழுத்தில் கத்தியை வைத்து,அவரது கழுத்திலிருந்த தங்க சங்கிலி, கைசங்கிலி என்பவற்றை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.




போராட்டத்துடன் தொடர்புடைய

# ஐந்து பேர் நூரளையில் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பு- காலிமுகத்திடல் போராட்டக்களத்துடன் தொடர்புடைய ஐவர் நுவரெலியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என நுவரெலியா பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து பொருள்களுக்கு சேதம் விளைவித்தமைக்கு எதிராகவே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்வதற்கு நுவரெலியா நீதிமன்றத்தில் உத்தரவு பெறப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய குறித்த சந்தேகநபரை கைதுசெய்வதற்கு அவரது வீட்டுக்கு சென்ற பொலிஸார், அங்கு மேலும் 4 பேர் மறைந்திருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அவர்களும் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

**“ பிங்கிரிய, கொதட்டுவ, களுத்துறை மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்**

இதனையடுத்து ஐந்து சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பிங்கிரிய, கொதட்டுவ, களுத்துறை மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# குளிக்கச் சென்ற இளைஞனைக் காணவில்லை

கலவான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீபாகம பிரதேசத்தில் குக்குளே கங்கையில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் (30) மாலை தனது நண்பர்களுடன் குறித்த இளைஞன் ஆற்றில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என கலவான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

22 வயதான மீபாகம-கலவானையைச் சேர்ந்த இளைஞனே காணாமல் போயுள்ளார்.

இளைஞரைத் தேடும் பணியை கடற்படையினர் முன்னெடுத்து வருவதுடன், கலவான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரதெல்ல குறுக்கு வீதியில் லொறி புரண்டு விபத்து

■ பி.கேதீஸ்ஹ

ட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில், நேற்று முன்தினம் காலை (30) லொறியொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், காயமடைந்த லொறியின் சாரதியும் அதில் பயணித்தவரும் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



கால்நடைகளுக்கு தீவனத்தை ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளான எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

# சமூக சீரழிவுக்கு இடமளித்து விடாமல் இருக்கவேண்டும்

குடும்பத்தை எவ்வாறு கொண்டுநடத்தப் போகின்றோம் என்றோர் ஏக்கப் பெருமூச்சு, குடும்பத்தலைவிகளின் தலையை நெருடிக்கொண்டே இருக்கின்றது. அந்தளவுக்கு குடும்பச் சுமை, நாளுக்கு நாள் எகிறிக்கொண்டே செல்கின்றது. வீட்டிலிருந்து நகரங்களுக்கு கிளம்பிச் செல்வதற்கே பெரும்பாலான பெண்கள் அஞ்சுகின்றனர். இருப்பதை வைத்து சமாளித்துக்கொள்வோம் எனும் மனநிலையிலேயே இருக்கின்றனர்.

கணவன்-மனைவி இருவருமே ஏதாவது வேலைக்குச் சென்று, ஓரளவுக்கு சம்பாதித்தால் குடும்பச் செலவை ஓரளவுக்கு சமாளித்துக்கொண்டு, முன்னோக்கி நகரமுடியும். அவ்வாறானவர்களின் சம்பாத்தியமும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும்.

பெண்களை மட்டுமே தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நிலைமையை சிந்தித்துப் பார்க்கவே முடியாதுள்ளது. அந்தளவுக்கு பொருளாதாரத்தின் கோரப்பிடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர். இதற்கிடையே, கடன், வட்டியென மறுபக்கத்திலும் இறுகிக்கொண்டுதான் வாழ்கின்றனர்.

திட்டம்போட்டு வாழ்ந்த காலம்போய், வட்டத்துக்குள் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நமது நாட்டை பொறுத்தவரையில், சுமார் ஒரு இலட்சம் பேர், நாளாந்தம் பட்டினியால் வாடுவதாக, உணவுப் பாதுகாப்பு குழு அறிவித்துள்ளது.

இன்னும், 25 ஆயிரம் குடும்பங்கள் எவ்விதமான உணவுத் திட்டமிடல்களும் இல்லாமல், கிடைத்ததை வைத்துக்கொண்டு, முன்கூட்டியே தீர்மானிக்காமல் உணவை உண்கின்றனர். ஆக, பட்டினியால் வாடுவோரின் பட்டியல், நாளாந்தம் இன்னுமின்னும் அதிகரிகரித்தே செல்லும். இதையே, இரண்டாம் நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை காட்டுகின்றது.

மூன்றாவதாக, சுமார் 40 ஆயிரம் பேர், தங்களுக்கான போஷாக்கான உணவை, சேலைன் ஊடாகவே பெற்றுக்கொள்கின்றனர் என்று உணவுப் பாதுகாப்பு குழு தெரிவித்துள்ளது. போஷாக்கான உணவு ஒருவேளையேனும் கிடைக்காவிடின், வயது முதிர்ந்தவர்களின் இருப்புக்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

வேலைவாய்ப்பு இன்மை, போஷாக்கான உணவு கிடைக்காமை, வருமானம் இன்மை, செலவுகள் தலைக்குமேல் தாண்டவமாடுகின்றமை போன்றவற்றால், மக்கள் அன்றாடம் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

நிரந்த தொழில்களில் இருப்பவர்கள் கூட, பகுதிநேரமாக ஏதாவது தொழிலை செய்ய முயல்கின்றனர். அந்தளவுக்கு பொருளாதார நெருக்கடி தலைவிரித்து ஆடுகின்றது. இதற்கிடையே, வேலையே கிடைக்காதவர்கள் மாற்று தொழில்களை நாடியே ஆகவேண்டும்.

எனினும், இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தி, மிகப்பெரிய பயங்கரமான சூழல் உருவாகிவிடுமோ என்றோர் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, இலங்கையில் கடந்த மாதம் மட்டும், பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை, 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இது பயங்கரமானது. சமூக சீரழிவுகள் அதிகரித்துகொண்டே செல்கின்றன என்பதற்கு இச்செய்தி நல்லதோர் உதாரணமாகும். பொருளாதார நெருக்கடியால், பெண்கள் பலரும், பாலியல் தொழிலாளர்களாக தங்களை மாற்றிவருகின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின், சமூக சீரழிவுகளை தடுக்கமுடியாமல் தடுமாறவேண்டிய நிலைமை ஏற்படுமென்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

துன்பங்ளைத் தேடுவதற்காக, நாங்கள் பிறப்பதில்லை. இடர்களை உடைத்து, நெடிதென எம்மை நாமே சிருஷ்டிக்கவே பிறந்துள்ளோம்.

கோடானு கோடி மக்களில் நாங்களும் ஒருவர். எனவே, நாங்கள் மட்டுமே இருளில் பயணிக்க வேண்டுமா என்ன? 'முடியும்', 'என்னால் முடியும்' எனும் தாரகமந்திரத்தை மறத்தலாகாது.

உங்களைப் போன்றவர்கள்தான், மிகப்பெரும் ஆற்றல் கொண்ட காரியங்களைச் செய்கின்றார்கள். பிறவியிலே அறிவாளி ஆகிவிட்டார் என்பார்கள். ஏன் நீங்கள் பிறக்காத மனிதரா? சில விடயங்கள் கைகூட, கொஞ்சம் காலதாமதம் ஏற்படலாம். மந்திரத்தால் எதையும் உருவாக்க முடியாது. ஆனால், உங்கள் தேகத்தால் எல்லாவற்றையும் செய்யலாம்.

ஆர்வம், துணிச்சல், உறுதி இருந்தால் பார்வையில் கம்பீரம் தோன்றும். போகும் பாதை தீட்சண்யமானது. நீதியுடன் வாழுங்கள்; உலகுக்காக உழைத்திடுங்கள். எல்லாமே கிடைக்கும்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் சந்தர்ப்பம்



என்.கே. அஷோக்பரன்

Twitter: @nkashokbharan

நிக்கலோ மக்கியாவலி, "யுத்தத்திலே, ஒரு வாய்ப்பை எவ்வாறு அடையாளம் காண்பது மற்றும், அந்த வாய்ப்பை எவ்வாறு கைப்பற்றுவது என்பதை அறிவது, எல்லாவற்றையும் விடச் சிறந்தது" என்று சொன்னார்.

அரசியலும் ஒரு வகையான யுத்தம்தான். அதில், வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளவும், உருவாகும் வாய்ப்புகளை அடையாளம் காண்பதும், அந்த வாய்ப்புகளைத் தமக்கேற்றவாறு பயன்படுத்துவதும்தான் மிகச் சிறந்த அரசியல் தந்திரோபாயமாகும்.

2009 யுத்த முடிவுக்குப் பின்னர், தமிழ்த் தேசிய அரசியலின் பேரம் பேசும் சக்தி என்பது, கணிசமாக வீழ்ச்சி கண்டிருந்தது. ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச அழுத்தங்களால்த்தான், தமிழ்த் தேசிய அரசியல் பெருமளவுக்குத் தங்கியிருந்தது.

அதன் விளைவாக, தமிழ்த் தேசிய அரசியல் தனது அபிலாஷைகளை அடைந்துகொள்வதில், எந்தப் படிமுறை முன்னேற்றத்தையும் அடைய முடியாததொரு சூழலையே எதிர்கொண்டிருந்தது.

2015-2019 'நல்லாட்சி'யின் போது, தமிழ்த் தேசிய அரசியலுக்கு நல்லதொரு பேரம் பேசும் சக்தி கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தன. குறிப்பாக, 2018 டிசெம்பருக்குப் பிறகு, தமிழ்த் தேசிய அரசியல் குறிப்பாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, அரசாங்கத்தில் செல்வாக்கு மிக்கதொரு கட்சியாக மாறியிருந்தது. ஆனால், அதன் பலன், தமிழ் மக்களுக்கு வந்து சேரவில்லை. மாறாக, ஒரு வருடத்துக்கு உள்ளாகவே, அரசியல் களம் முற்றாக மாறிவிட்டிருந்தது.

2019இல் கோட்டா ஜனாதிபதியானது முதல், தமிழ்த் தேசிய அரசியல், மீண்டும் பேரம் பேசும் பலம் குறைந்து, அரசியல் பின்னரங்கில் ஒதுங்கிப்போனது. 'நல்லாட்சி' காலத்தில், ஆளும் அரசாங்கத்தோடு செல்வாக்குக் கொண்டிருந்தும், அதன் பலனை, தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்காததன் விளைவை, 2020 பொதுத் தேர்தலில், த.தே. கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் உணர்த்தியிருந்தனர்.

2015இல் 515,963 வாக்குகளை மொத்தமாகப் பெற்று, 16 ஆசனங்களைப் பெற்றிருந்த த.தே. கூட்டமைப்பு, 2020 பொதுத் தேர்தலில் 327,168 வாக்குகளைப் பெற்று, 10 ஆசனங்களையே பெற்றுக்கொண்டது. 2015 பொதுத் தேர்தலில், வேறெந்த தமிழ்த் தேசிய கட்சியாலும் ஓர் ஆசனத்தைக் கூட வெல்ல முடியாத நிலை இருந்தது.

ஆனால், 2020 பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன. இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை இழப்பின் எதிரொலி ஆகும்.

ஏனென்றால், கூட்டமைப்பு 2015-2019 காலப்பகுதியில், ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. மஹிந்தவை தோற்கடித்து, மைத்திரி ஜனாதிபதியாகியதின் பின்னணியில் உழைத்த எதிர்க்கட்சிகளில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முக்கியமானது. ஆகவே, அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, த.தே.கூட்டமைப்பு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் ஒருசிலவற்றையேனும் நிறைவேற்றுவதற்கு முயலும் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கை, பொய்த்துப்போனதுதான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, 2020 தேர்தலில் 188,795 வாக்குகளை இழக்கக் காரணமாகும்.

'நல்லாட்சி'க்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவளித்த காலத்தில், குறைந்தபட்சம் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சுயாதீன விசாரணையும் நீதியும், யுத்தகால அநீதிகளுக்கான நியாயம், இராணுவம் அடாத்தாகப் பிடித்துவைத்திருக்கும் தமிழ் மக்களின் தனியார் காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இல்லாதொழிப்பு அல்லது மறுசீரமைப்பு, மாகாண சபைகளை அதன் முழுமையான அதிகாரங்களுடன் இயங்கவிடுதல், ஆளுநரின் தலையீட்டை குறைக்கும் மறுசீரமைப்பு ஆகியவற்றையேனும் செய்ய முடிந்திருந்தால், தமிழ் மக்களின் தனிப்பெரும் அரசியல் சக்தியாக, அல்லது அவர்கள் சொல்ல விரும்பும் 'ஏக பிரதிநிதி'யாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மிளிர்ந்திருக்கக் கூடும்.

ஆனால், 'நல்லாட்சி' அரசாங்கத்தைக் காப்பாற்றிக்கொடுத்தும், தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பது, தமிழ் மக்களை அதிருப்தி அடையச் செய்ததன் விளைவுதான் 2020 தேர்தல் முடிவுகளில் எதிரொலித்தது.

ஆனால், 2015-2019 'நல்லாட்சி'யில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறாமைக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மட்டும் குறை கூறியும் பயனில்லை. ஏனென்றால், ராஜபக்ஷர்கள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டாலும், நாட்டில் அவர்களுக்கான ஆதரவும் அவர்கள் மீதான அனுதாபமும், 'யுத்த வெற்றியாளர்'கள் என்ற பெருமைமிகு அடையாளமும், பெரும்பான்மை மக்களிடம் தொக்கி நின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டவைகள் அநீதிகள் என்பதைக் கூட, ஏற்றுக்கொள்ளும் மனநிலை, இந்நாட்டின் பெரும்பான்மை இனத்திடம் அன்று இருக்கவில்லை. ராஜபக்ஷர்களைத் தேர்தலில் தோற்றிருந்தாலும், சிங்கள-பௌத்த தேசியவாதம் சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது. அதனால், 'நல்லாட்சி' அரசாங்கம், சிங்கள-பௌத்த தேசியவாத மனநிலைக்கு எதிராக எதையும் செய்தால், தமது அரசியல் சூனியமாகிவிடும் என்ற அச்ச மனநிலையில் இருந்தனர்.

குறிப்பாக, பண்டாரநாயக்க-ராஜபக்ஷ பாசறையிலிருந்து வந்த, யுத்த வெற்றியில், தன்னைப் பங்குதாரராகக் காட்டிக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, சிங்கள-பௌத்த பெரும்பான்மை தேசியவாதத்துக்கு எதிராக நடந்து கொள்ள விரும்பவில்லை. அதனால்தான், தமிழ் மக்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. கடமைக்கென, காணாமல் போனோர் அலுவலகம் உள்ளிட்ட சில உருவாகின.

ஆனால், 2022 கோட்டாவுக்கு எதிரான மக்கள் அலை கிளம்பிய போது, அது, 2015 அலையைப் போலல்லாது, சிங்கள-பௌத்த பேரினவாதத் தேசியவாதத்துக்கும் எதிரான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதோர் எழுச்சியாகவே அமைந்திருந்தது.

இன்று, சிங்கள-பௌத்த மக்கள் பலர் மிக வெளிப்படையாக, தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகள் குறித்துப் பேசுகிறார்கள்; கண்டனங்களை முன்வைக்கிறார்கள்; மன்னிப்புக் கோருகிறார்கள். தமிழ் மக்களுக்கு எதிராக, பெரும் அநீதி இழைக்கப்பட்டு இருக்கிறது என்பதை, சிங்கள-பௌத்த மக்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கி இருப்பதே பெரும் மாற்றம்தான்.

அதுபோல, சுதந்திரகாலம் முதல், இந்நாட்டைப் பீடித்துள்ள இன-மதத் தேசியவாதம்தான் இன்று, நாடு நாசமாகப் போயிருப்பதற்கான காரணம் என்பதை, கணிசமான சிங்கள-பௌத்த மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்; ஆகவே, இன்று அரசியல் களம் என்பது, முற்றாக மாறியிருக்கிறது என்பதை உணரலாம்.

இலங்கையின் பெரும்பான்மையின மக்களிடையே 2015இல் ராஜபக்ஷ எதிர்ப்பு மட்டுமே, கணிசமானளவில் ஏற்பட்டது. சிங்கள-பௌத்த பெருந்தேசியவாதம் உயிர்ப்போடிருந்தது. ஆனால் 2022இல், ராஜபக்ஷ எதிர்ப்போடு, இன-மதத் தேசியவாதத்துக்கு எதிரான எதிர்ப்பலையும், இலங்கையின் பெரும்பான்மையின மக்களிடம் ஏற்பட்டுள்ளதன் சமிக்ஞைகள் மிகத்தெளிவாகத் தெரிகின்றன.

இதுதான் தமிழ்த் தேசிய அரசியலுக்கும், தமிழ் மக்களுக்குமான அரிய வாய்ப்பு. இன்று ஆட்சியில் உள்ளவர்களோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, தமிழ் மக்களின் சில முக்கிய கோரிக்கைகளையேனும் நிறைவேற்றிக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைச் செய்ய, தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வரவேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சுயாதீன விசாரணையும் நீதியும், யுத்தகால அநீதிகளுக்கான நியாயம், இராணுவம் அடாத்தாகப் பிடித்துவைத்திருக்கும் தமிழ் மக்களின் தனியார் காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இல்லாதொழிப்பு அல்லது மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு பெரும்பான்மை மக்களிடையே ஆதரவு இருக்கக்கூடிய நிலையில், இதைச் செய்வதற்கு ஆட்சியில் உள்ளவர்களை ஊக்கப்படுத்த இதைவிட வேறுவாய்ப்பு இருக்க முடியாது.

இன்று, மேற்சொன்னவற்றுக்கு பெரும்பான்மை மக்களிடமிருந்து பெருமளவு எதிர்ப்பு வராது. வரலாற்றுப் பிழைகளைச் சரிசெய்யும் ஒரு நடவடிக்கையாக, இவை முன்னெடுக்கப்படலாம். இதைச் செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க போன்றதொரு ஜனாதிபதிதான் தேவைப்பட்டார்.

ஆனால், சிங்கள-பௌத்த பெருந்தேசியவாதம், அவற்றைச் செய்வதற்கு இதுவரை அனுமதிக்கவில்லை. இன்று காலத்தின் கோலமாக, ஒரு விபத்தாக, ரணில் ஜனாதிபதியாகி இருக்கிறார். ஆகவே, இது ஓர் அருமையான வாய்ப்பு.

ஆனால், இவற்றை இலகுவாகச் செய்துவிடவும் கூடாது. மிகுந்த ராஜதந்திரத்துடன், நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் முன்வைத்து, தொடர் பேச்சுவார்த்தைகள் மூலம் அடையப்படவேண்டியவை ஆகும்.

2015இல் இருந்த களநிலவரத்தைவிட, இன்றைய களநிலவரம் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு சாதகமானதாகவே இருக்கிறது. ஆகவே, தேசிய அரசியலின் முரண்பாடுகளுக்குள்ளும், தனிநபர் பிரச்சினைகளுக்குள்ளும் தேவையில்லாமல் சிக்கிக்கொள்ளாமல், இன்றுள்ள அரசாங்கத்திடமிருந்து, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளில் ஒரு சிலவற்றையேனும் நிறைவேற்றிக்கொள்ளுதல் தான் புத்திசாலித்தனமான அரசியல்.

ஒட்டோ வொன் பிஸ்மார்க் சொன்னது போல, "அரசியல் என்பது சாத்தியமானவற்றின் கலை".

எந்தப் பயனுமில்லாமல் ரணிலை எதிர்ப்பதை விட, ரணிலைப் பயன்படுத்திக்கொண்டு, சாத்தியமான ஒன்றிரண்டையேனும் அடைந்துகொள்வதுதான் மக்களுக்குப் பயன்தரும் அரசியலாக இருக்கும். இதுபோன்ற வாய்ப்புகள் எப்போதும் அமைவதில்லை. பயன்படுத்திக்கொள்வார்களா தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள்?

## கடிதங்கள்

### சம்மாந்துறையில் சிறுபோக அறுவடை: முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு டீசல் வழங்குக

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் தற்போது சிறுபோக வேளாண்மை அறுவடை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், உழவு இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றுக்கான டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால், வயல்களில் அறுவடை செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை, மல்வத்தை கமநல சேவைகள் மத்திய நிலையங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில், 22 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை, அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் உள்ளதாக, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறையில் நான்கு எரிபொருள் நிலையங்களிலும் உழவு இயந்திரம், கலன்களின் மூலம் டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக, விவசாயிகள் பல நாள்களாக வரிசையில் காத்திருக்கின்ற போதிலும், டீசலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில், வாகன சாரதிகளும் நீண்ட நாள்களாக வரிசையில் காத்திருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில், விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், டீசலை வழங்குவதற்கு சம்மாந்துறையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தினர் முன்வர வேண்டும்.

எனவே, வேளாண்மைக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில், விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கான பொறிமுறையை, முன்னெடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எம்.சி. அன்சார்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு

# Autoclaves இயந்திரங்கள் அன்பளிப்பு

கொமர்ஷல் வங்கி, அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நுண்ணுயிரிகள் மற்றும் வித்திகளைக் கொல்லும் வகையில் அதிக வெப்பமான நீராவியை உருவாக்குவதற்கு நீர், அழுத்தம் மற்றும் வெப்பத்தைப் பயன்படுத்தும் இரண்டு அழுத்த அனற்கல (Autoclaves) இயந்திரங்களை வழங்கியது. வைத்தியசாலையின் கோரிக்கைக்கு இணங்க இவை வழங்கப்பட்டுள்ளன.



இந்த அலகுகள், மருத்துவமனையின் அறுவை சிகிச்சை அரங்கில் தொற்றுக் கட்டுப்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும். யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பிரதேசத்தில் சுமார் 150,000 பேருக்கு பருத்தித்துறை வைத்தியசாலை 'வகை ஏ' அடிப்படை வைத்தியசாலையாக சேவையாற்றி வருகின்றது.

நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும்

# மர நடுகைத் திட்டம்

அளவற்ற சூழல் சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சித்திட்டங்களின் மற்றுமமோர் அங்கமாக, அநுராதபுரத்திலும் கொழும்பிலும் மர நடுகைத் திட்டங்களை SLT-MOBITEL முன்னெடுத்திருந்தது.

'தூய வளி மற்றும் உரத்தினூடாக நாட்டுக்கு வளமூட்டுவோம்' எனும் தொனிப்பொருளுக்கமைய, நாடு முழுவதிலும் மர நடுகைத் திட்டத்தை SLT-MOBITEL ஆரம்பித்திருந்தது. எமது வளியின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் பச்சை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்து, ஆரோக்கியமான மண் வளத்தையும் இயற்கை ஈரப்பதக் கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதற்கான உறுதிமொழிக்கமைய இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தது.




தேசிய நாமல் பூங்கா சர்வதேச பௌதீகவியல் அமைப்பின் 31 ஆவது ஆண்டு பூர்த்தியுடன், கொழும்பில் மர நடுகைத் திட்டம் இடம்பெற்றது. Sat Co Lanka Technology (Pvt) Ltd. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான எச்.எம்.பைசல் தீன், இந்தத் திட்டத்துக்கு அவசியமான இலுப்பை மரக்கன்றுகளை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

இந்தத் திட்டத்துக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில், SLT-MOBITEL இனால் அநுராதபுரம் ஸ்ரீ மகா போதி வளாகத்தில் இலுப்பை மரக்கன்றுகளை நடும் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. அநுராதபுரத்தைச் சேர்ந்த மக்களுக்கு SLT-MOBITEL அதிகாரிகளிடமிருந்து இலுப்பை மரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

களை கட்டுப்பாட்டில் ஆற்றும் பங்களிப்பு, சேதன உரத் தயாரிப்பில் பயன்படுத்தக்கூடிய திறன், வளியை தூய்மைப்படுத்தும் திறன் மற்றும் இயற்கை மூலிகையாக பயன்படுத்தக்கூடியமை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு இந்தத் திட்டத்துக்காக இலுப்பை மரம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. THURU மொபைல் அப்ளிகேஷனை பயன்படுத்தி, இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் நவீன தொழில்நுட்ப வசதி, இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

இது போன்ற திட்டங்களினூடாக சூழல் பாதுகாப்புக்கு நேர்த்தியான பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதில் SLT-MOBITEL உறுதியான நம்பிக்கையை கொண்டிருப்பதுடன், சூழல் சமூக ஆளுகை (ESG) தொடர்பில் நிறுவனத்தின் செயற்பாடுகள் விரிவாக்கம் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், பெருமளவு இணைக்கப்பட்ட, பாதுகாப்பான மற்றும் நிலைபேறான எதிர்காலத்தை பேணுவதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ்

# FriMi உடன் கைகோர்ப்பு

யூனியன் அஷ்யூரன்ஸ், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் FriMi உடன் கைகோர்த்துள்ளது. யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் Clicklife ஒன்லைன் தீர்வை மக்கள் மத்தியில் இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய வகையில் இந்தக் கைகோர்ப்பு அமைந்துள்ளது. சௌகரியம் மற்றும் அணுகல்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தி புதிய தலைமுறை காப்புறுதித் தீர்வுகளை வழங்கி, இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுச்சேர்ப்பதாக இந்தக் கைகோர்ப்பு அமைந்துள்ளது.




சில நிமிடங்களினுள் FriMi appஇனூடாக Clicklife Online தீர்வை கொள்வனவு செய்வதற்கான பங்காண்மையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. புரட்சிகரமான தீர்வாக அமைந்துள்ள Clicklife, 100% கடதாசி பாவனை அற்றதாகவும், காப்புறுதியைக் கொள்வனவு செய்வதற்கு இலகுவானதும், சாத்தியமானதுமான முறையாக அமைந்துள்ளது. நாளொன்றுக்கு ரூ. 23 க்கு ஆரம்பித்து, ரூ. 4 மில்லியன் வரையான பாதுகாப்பை வழங்குகின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில், "டிஜிட்டல் கைகோர்ப்பாக FriMi உடன் இணைந்துள்ளதனூடாக, இலங்கையில் ஆயுள் காப்புறுதியின் சென்றடைவை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். எமது வர்த்தக நாமப் பெறுமதிகளில், வாடிக்கையாளர்கள் மையப்படுத்திய செயற்பாடு என்பது எப்போதும் முன்னிலை பெறுவதுடன், இந்தத் திட்டத்தினூடாக, டிஜிட்டல் ஆற்றல்களினூடாக எம்மால் புதிய அனுபவத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்" என்றார்.

> **எமது வர்த்தக நாமப் பெறுமதிகளில், வாடிக்கையாளர்கள் மையப்படுத்திய செயற்பாடுகள் தான் எப்போதும் முன்னிலை பெறுகின்றன**

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியுடன் தந்திரோபாய பாங்கசூரன்ஸ் பங்காண்மையை யூனியன் அஷ்யூரன்ஸ் ஏற்கெனவே கொண்டுள்ளதுடன், FriMi உடனான இந்தப் புதிய திட்டத்தினூடாக, அந்தப் பங்காண்மைக்கு மேலும் வலிமை சேர்க்கப்படும்.

சாகர்

# ஒரே ஊசியை வைத்து 39 மாணவர்களுக்கு தடுப்பூசி

ஒரே ஊசியை பயன்படுத்தி 39 மாணவர்களுக்குத் தடுப்பூசி செலுத்திய சம்பவம், மத்தியப் பிரதேச மாநிலத்தின் சாகர் என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள பாடசாலையில், மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றுள்ளது. அங்கு ஒரே ஊசியை வைத்து, சுமார் 30 மாணவர்களுக்குத் தடுப்பூசி டோஸ்களை செலுத்தியுள்ளார் மருத்துவ தாதி. இதைக் கண்ட மாணவர்களின் பெற்றோர், அதிர்ச்சி அடைந்து அவரிடம் தங்களின் சந்தேகத்தை கேட்டுள்ளனர். அதற்கு அவர், "இதில் என்னை ஏன் குறை சொல்கிறீர்கள். நிர்வாகம் எனக்கு ஒரு சிரஞ்ச் மட்டும் தான் தந்துள்ளது. அப்படி இருக்க நான் என்ன செய்யட்டும்" என்றுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் 9 முதல் 12 ஆம் வகுப்பை சேர்ந்தவர்கள்.




தொடர்ந்து, பெற்றோர் எழுப்பிய புகாரின் பேரில், அந்த நபர் கைது செய்யப்பட்டு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், அம்மாவட்ட தடுப்பூசி திட்ட பிரிவு தலைமை அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காந்திநகர்

# 5 வருடங்களாக மிரட்டி பாலியல் பலாத்காரம்

## அமைச்சருக்கு எதிராக புகார்



குஜராத் மாநில அமைச்சர் ஒருவர், பெண்ணொருவரை 5 ஆண்டுகளாக மிரட்டி, பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படும் புகாரால், குஜராத் அரசியலில் சர்ச்சை வெடித்துள்ளது.

குஜராத்தில் பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) ஆட்சி நடக்கிறது. இந்த ஆண்டு இறுதியில் குஜராத் மாநிலத்துக்கு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் சட்டசபை தேர்தல் பணிகளை பா.ஜ.க, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

குஜராத் மாநில அமைச்சர் மஹ்மதாவத் அர்ஜுன் சிங் சவுகான், 2016 முதல் 2021 வரை பலாத்காரம் செய்ததாக பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

"என் மனைவிக்கும் அர்ஜுன்சிங்குக்கும் 2015இல் பழக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு என் மனைவியை, தாலுகா பஞ்சாயத்து வேட்பாளராக அவர் முன்மொழிந்தார். இதில் என் மனைவி வெற்றி பெற்றார். 2016 முதல் 2021க்கு இடையே அர்ஜுன் சிங், ஆலோசனை கூட்டம் என்ற பெயரில் மனைவியை பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்" என முறையிட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசம்

"தண்ணீல கால்படக்கூடாதாம்"

# ஒய்யாரமாய் நடந்த ஆசிரியை

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆசிரியை ஒருவர் வெள்ள நீர் சூழ்ந்த தனது பள்ளிக்குள் நுழைவதற்கு, மாணவர்களை நாற்காலிகளை அடுக்கி வைத்து பாலம் போல அமைத்து, அதன் மேல் நடந்து சென்றுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம், மதுராவில் கடந்த சில நாள்களாக கடும் மழை பொழிந்துள்ளது. இதையடுத்து அங்குள்ள பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள நிலையில், அங்குள்ள பள்ளி ஒன்றில், அதன் வளாகம், மைதானம் முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில், அந்த பள்ளியில் பணிபுரியும் ஆசிரியை, பள்ளிக்குள் நுழைய செய்த காரியம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அந்த ஆசிரியை, மழை நீரில் கால்கள் படக்கூடாது என்பதற்காக, அங்கு படிக்கும் மாணவர்களை கொண்டு, பள்ளியில் உள்ள நாற்காலிகளை வாசலில் இருந்து வகுப்பறை வரை வரிசையாக பாலம் போல அடுக்கி வைக்கச் சொல்லியுள்ளார். பின்னர் அந்த நாற்காலி மீது ஏறி, ஒவ்வொரு நாற்காலியாக தாண்டி, வகுப்பறைக்குள் கால்கள் நனையாமல் செல்கிறார்.



அந்த ஆசிரியை, தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

சிக்பள்ளாப்பூர்

# ஏரியை காணவில்லை எனக்கூறி போராட்டம்

கர்நாடக மாநிலம் சிக்பள்ளாப்பூர் மாவட்டம் பாகேபள்ளி தாலுகா பெல்லாலம்பள்ளி கிராமத்தில் விவசாயிகள் ஒரு வினோத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராமத்தையொட்டி இருந்த ஏரியை காணவில்லை என்றும், அதை பொலிஸார் கண்டுபிடித்து தர வேண்டும் என்றும் கோரி போராட்டம் நடத்தினர்.

இந்த கிராமத்தில் ஒரு ஏரி இருந்துள்ளது. அந்த ஏரியை அதே கிராமத்தைச் சேர்ந்த சிலர் தங்களது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி ஆக்கிரமித்து கொண்டதாகவும், அங்கு விவசாயம் உள்பட பல்வேறு பணிகளை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதை கண்டித்தும், ஏரியை மீட்டு தருமாறும் கோரி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடகா

# 'பிரேதா கல்யாணம்'

கர்நாடகா மாநிலத்தில் உள்ள தக்ஷின கன்னடா மாவட்டத்தில் வினோதமான திருமண சடங்கு நடைபெற்றுள்ளது. 'பிரேதா கல்யாணம்' என்ற பெயரில் நடைபெற்ற இந்தத் திருமண சடங்கில், 30 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த நபர்களுக்கு மீண்டும் திருமணம் செய்து வைத்தனர். இந்த வினோத திருமண சடங்கானது, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் நடைபெறுகிறது.

மணமகனாக கருதப்படும் ஆணும், மணமகளாக கருதப்படும் பெண்ணும் சிசுக்களாக மகப்பேற்றின் போதே உயிரிழந்துவிட்டன.

இவர்களின் ஆன்மாவை போற்றி, சாந்தியடையச் செய்யும் விதமாக இந்தத் திருமண சடங்கை அவர்களுக்கு செய்கிறார்கள். திருமணத்திற்கான சராசரியான வயது 30 என்பதால், இந்தப் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த இரண்டு சிசுக்களுக்கு அந்தக் குடும்பத்தினர் திருமண விழாவை செய்து வைத்தனர்.



புதிய திருமண ஆடைகளை வாங்கி வைத்து, இரண்டு இருக்கைகளை அருகருகே வைத்து, அவற்றின் மீது திருமண ஆடைகளை வைக்கின்றனர். அந்த இருக்கைகளில் மணமக்கள் இருப்பதாகக் கருதி, இரண்டு குடும்பத்தினரும் சடங்குகளை செய்கின்றனர். அனைத்து திருமண சடங்குகளும் இவர்களுக்கு முறைப்படி செய்து வைக்கப்படுகிறது.

பின்னர், தாலி கட்டும் முகூர்த்த நேரத்தில் தான் மணமக்களின் பெயர் என்ன என கேட்கப்பட்டு, மணமகனுக்கு 'சந்தப்பா' எனவும் மணப்பெண்ணுக்கு 'சோபா' எனவும் பெயர் சூட்டப்படுகிறது. தாலி கட்டப்பட்டு, மணமக்களுக்கு அனைவரும் அட்சதை தூவி ஆசிர்வதித்து, பின்னர் ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ளும் வரவேற்கின்றனர்.

திருவனந்தபுரம்

# சிறுவன் தயாரித்த வைன்; பருகிய நண்பனுக்கு சிக்கல்

கேரள மாநிலம், திருவனந்தபுரம் மாவட்டம், சிரயின்கீழ பகுதியைச் சேர்ந்த 12 வயதான பாடசாலை மாணவன், தனது பெற்றோர் வாங்கிவந்த திராட்சை பழத்தை கொண்டு வைன் தயாரிக்க முயற்சித்துள்ளான்.

யூடியூபில் கூறுவது போல, திராட்சை சாறை சேகரித்து ஒரு போத்தலில் அடைத்து வைத்துள்ளான். பின்னர், அந்தப் போத்தலை கடந்த சில நாள்களாக வீட்டிற்கு அருகே மண்ணுக்குள் புதைத்து வைத்துள்ளான். பின்னர், ஒயின் தயாராகியிருக்கும் என கருத்தி, மண்ணில் புதைத்து வைத்த அந்தப் போத்தலை பாடசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளான்.

அங்கிருந்த தனது நண்பனுக்கு கொடுத்துள்ளான். அதனை குடித்த சக மாணவன், சிறிது நேரத்தில் பள்ளியிலேயே வாந்தி எடுத்துள்ளான். பாடசாலை நிர்வாகம் அச்சிறுவனை மருத்துவமனையில் அனுமதித்தது. அவர் குணமடைந்து வருகின்றார்.

அதன்பின்னர், வைன் தயாரித்த சிறுவனிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர். வைன் தயாரித்ததை அச்சிறுவன் ஒப்புக்கொண்டுள்ளான். இந்நிலையில், அதுதொடர்பில் தாய் தெரிவிக்கையில், " எனது மகன் திராட்சை பழத்தை கொண்டு எதோ தயாரித்து வருகிறான் என்பது, எனக்கு முன்கூட்டியே தெரியும். ஆனால், அது வைன் என்று தெரியாது" என்றார்.

இந்நிலையில், சிறுவன் தயாரித்த திராட்சை ரச வைனை கைப்பற்றிய பொலிஸார், அதைப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். அந்த வைனில், மதுசாரம் கலந்திருந்திருந்தால் கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவனையும் அவனது பொற்றோரையும் எச்சரித்து பொலிஸார் அனுப்பினர்.

அமெரிக்கா

குற்ற உணர்ச்சியில்

# தவிக்கும் 'வில் ஸ்மித்'

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 94 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழாவில், சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது கிங் ரிச்சர்ட் திரைப்படத்தில் நடித்ததற்காக பிரபல ஹொலிவூட் நடிகர் வில் ஸ்மித்திற்கு முதன்முறையாகக் கிடைத்தது. இந்நிகழ்வின் போது தொகுப்பாளரும் நகைச்சுவை நடிகருமான கிறிஸ்ராக், வில் ஸ்மித்தின் மனைவி ஜடாபிங்கெட்டின் தலை முடியை கிண்டல் செய்ததால், கோபமடைந்த வில் ஸ்மித் மேடைக்குச் சென்று கிறிஸ் கன்னத்தில் தாக்கினார்.

இச்சம்பவம் உலக அளவில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. வில் ஸ்மித்தின் மனைவி ஜடா அலோபீசியா எனும் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற



நிலையில் அது பற்றி கிறிஸ் ராக் கிண்டல் செய்து தவறு எனவும் வில் ஸ்மித் செய்தது சரி எனவும் சிலர் வாதிட்டுள்ளனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து வில் ஸ்மித் ஒஸ்கார் அகடமி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார்.

மேலும் ஒஸ்கர் விருது விழா மற்றும் பிற அகாடமி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வில் ஸ்மித்ருக்கு 10 ஆண்டுகள் தடை விதித்தும் ஒஸ்கார் அகாடமி அமைப்பு உத்தரவிட்டிருந்தது. . இருந்தபோதிலும் இவ் விவகாரம் தொடர்பாக வில் ஸ்மித் எவ் கருத்தும் தெரிவிக்காமல் இருந்து வந்துள்ளார். இந்நிலையில் அவர் தனது செயலுக்காக கிறிஸ்ராக்கிடம் ஏன் மன்னிப்பு கேட்கவில்லை என ரசிகர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பு வருகின்றனர். ரசிகர்களின் கேள்விக்கு பதில் அளிக்கும் விதமாக வில் ஸ்மித் தனது youtube பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

அந்த வீடியோவில் கிறிஸ் ராக்கை தான் தொடர்பு கொண்டு பேச முயற்சி செய்ததாகவும் ஆனால் இது பற்றி தற்போது பேச தயாராக இல்லை என கிறிஸ் ராக் தரப்பில் பதில் அளித்ததாகவும் வில் ஸ்மித் தெரிவித்துள்ளார். மேலும் தனது செயல் எந்த வகையிலும் ஏற்கத்தக்கது அல்ல எனவும், இதற்காக கிறிஸ் ராக்கிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் அவரிடம் எப்போது வேண்டுமானாலும் பேச தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா

## இப்படி ஒரு உயிரினமா? வைரலாகும் புகைப்படம்"



அண்மையில் அவுஸ்திரேலியாவின் சிட்னி கடற்கரையில் கரை ஒதுங்கிய உயிரினமொன்று மக்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த கடற்கரைக்கு விக்கி ஹேன்சன் என்ற நபர் தனது நாயுடன் காற்று வாங்கச் சென்றுள்ள நிலையிலேயே மணலில் விசித்திரமாக உயிரினமொன்றைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். இதுபற்றி பேசிய அவர்,"மணலில் நீளமாக கிடந்த அந்த உயிரினத்தின் மீது பல வண்ண கலவைகளால் ஆன, இறக்கைகள் போன்ற அமைப்பு இருந்தது. அவை அசைந்து கொண்டிருந்தன. அந்த உயிரினத்தின் இன்னொரு பாதி கடலிலேயே துண்டிக்கப்பட்டு இருக்கலாம் என எண்ணினேன். நான் இதுபோன்ற ஒன்றை பார்த்ததில்லை. யாரும் இப்படி ஒரு விநோதத்தைப் பார்த்திருப்பார்களா என்றும் தெரியவில்லை" என்றார். எனினும் சில நாட்கள் கழித்து மீண்டும் அதே பகுதிக்கு விக்கி சென்றபோது எந்த அசைவுகளும் இன்றி அந்த உயிரினம் காணப்பட்டதாகவும், இதனால் அது உயிரிழந்திருக்கலாம் எனக் கருதியதாகக் கூறியுள்ளார் .

அமெரிக்கா

## மீண்டும் மீண்டுமா?



கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் நலமுடன் இருப்பதாகவும் , விரைவில் மீண்டுவந்து வழக்கமான பணியில் ஈடுபடுவேன் எனவும் பைடன் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து நேரடி தொடர்புகளை தவிர்த்துவிட்டு, காணொலி மூலம் ஜனாதிபதி பைடன் தனது வழக்கமான பணிகளை மேற்கொள்வார் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

வெள்ளப்பெருக்கில் சிக்கி

## 25 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவின் கென்டகி மாகாணத்தில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் வீடுகள், வீதிகள், வாகனங்கள் என்பன வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இந்நிலையில், இவ் வெள்ளத்தில் சிக்கி 4 குழந்தைகள் உட்பட 25 பேர் வரை உயிரிழந்து உள்ளனர் எனவும் பலர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்ந்து மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## ஆயுதங்கள் ஒப்படைப்பு

அமெரிக்காவில் நாளுக்கு நாள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் இத்துப்பாக்கிக் கலாசாரத்தைக் குறைக்கும் வகையில் டெக்சாஸ் மாகாணத்தில் சுமார் 700க்கும் மேற்பட்ட துப்பாக்கிகளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்த பொதுமக்கள் அதற்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டனர். குறிப்பாக ஹூஸ்டன் நகரில் சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவுக்கு கார்களில் காத்திருந்த மக்களிடம் இருந்து துப்பாக்கிகளைப் பெற்ற பொலிஸார் செயல்படாதத் துப்பாக்கிகளுக்கு 50 டொலர்கள் வழங்கியுள்ளனர். மேலும், துப்பாக்கிகளின் வகைகளைப் பொறுத்து 100 முதல் 200 டொலர்கள் வரை மதிப்புள்ள விசா பரிசு அட்டைகளையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

பாகிஸ்தான்

## பாகிஸ்தானில் வரலாறு படைத்த இளம் பெண்



பாகிஸ்தானில் சிறுபான்மையினராக இருக்கும் இந்துக்களில், பெண்கள் உயர் பதவிகளில் இருப்பது என்பது மிகவும் அரிதான விடயமாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தைச் சேர்ந்த மனிஷா ரோபேட்டா என்ற 26 வயதான இந்துப் பெண்ணொருவர் அந்நாட்டு காவற்துறையில் டிஎஸ்பி ஆக பதவியேற்கவுள்ளார். இதன் மூலம் பாகிஸ்தான் காவல்துறையில் டிஎஸ்பி ஆகிய முதல் இந்துப் பெண் என்ற வரலாறையும் அவர் படைத்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மனிஷா," பெண் முன்னேறும் வழிகளை முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன் என்றும், காவல்துறையில் பாலின சமத்துவத்தையும் ஊக்குவிக்க முயல்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா

## ரொக்கெட் பாகம் விழுந்தது

அவுஸ்திரேலியாவில் தெற்கு நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஒரு செம்மறி பண்ணையொன்றில் அண்மையில் வானில் இருந்து பயங்கர சத்தத்துடன் 3 மீற்றர் உயரமுள்ள ரொக்கெட் பாகமொன்று விழுந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இது குறித்து ஆராய்ந்த வானியல் ஆராய்ச்சியாளர்கள்"குறித்த ரொக்கெட் பகுதியானது 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஏவப்பட்ட ஸ்பேஸ். எக்ஸ் டிராகன் விண்கலத்தின் டிரங்க் பகுதி எனத் தெரிவித்துள்ளனர்.

கொமியூனிட்டி ஷீல்ட்:

# சிற்றியை வீழ்த்திய லிவர்பூல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக்கின் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியுடனான கால்பந்தாட்டச் சங்க கொமியூனிட்டி ஷீல்ட் போட்டியில் கால்பந்தாட்டச் சங்கக் கிண்ணத் தொடர் சம்பியன்களான லிவர்பூல் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

பிறீமியர் லீக் கழகமான லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியில் லிவர்பூல் சார்பாக, ட்ரென்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட், மொஹமட் சாலாஹ், டர்வின் நுனேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் அல்வரேஸ் பெற்றிருந்தார்.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## சிம்பாப்வேயிடம் தோற்ற பங்களாதேஷ்

சிம்பாப்வேக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் தோற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 205/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ்லி மட்ஹெவெரே 67 (46), சிகண்டர் ராசா ஆ.இ 65 (26), ஷோன் வில்லியம்ஸ் 33 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஷாடெக் ஹொஸைன் 1/21 [3], அஃபிஃப் ஹொஸைன் 0/6 [1])

பங்களாதேஷ்: 188/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நுருல் ஹஸன் ஆ.இ 42 (26), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 37 (25), லிட்டன் தாஸ் 32 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுக் ஜொங்வி 2/34 [4], வெலிங்டன் மஸகட்ஸா 1/23 [3])

போட்டியின் நாயகன்: சிகண்டர் ராசா



ஜேர்மனிய சுப்பர் கிண்ணம்:

## லெய்ப்ஸிக்கை வீழ்த்தி வென்ற மியூனிச்



ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான கிண்ணத் தொடர் சம்பியன்களான ஆர்.பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான ஜேர்மனிய சுப்பர் கிண்ணப் போட்டியில் புண்டெலிஸ்கா தொடரின் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் 5-3 என்ற கோல் கணக்கில் வென்றது.

மியூனிச் சார்பாக, ஜமால் முசியாலா, சாடியோ மனே, பெஞ்சமின் பவார்ட், சேர்ஜி நர்பி, லெரோய் சனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லெய்ப்ஸிக் சார்பாக, மார்செல் ஹல்ஸ்டென்பேர்க், கிறிஸ்டோபர் என்குங்கு, டனி ஒல்மோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாயப் போட்டிகள்:

## 23ஆவது இடத்தில் இலங்கை

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்று வருகின்ற பொதுநலவாயப் போட்டிகளில், ஆண்களுக்கான 55 கிலோ கிராம் எடைப் பிரிவில் இசுரு குமார நேற்று முன்தினம் வென்ற வெண்கலப் பதக்கத்துடன் 23ஆவது இடத்தில் பதக்கப் பட்டியலில் இலங்கை காணப்படுகின்றது.

பதக்கப் பட்டியலில் முதலாமிடத்தில், 13 தங்கப் பதக்கங்கள், எட்டு வெள்ளிப் பதக்க்கங்கள், 11 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 32 பதக்கங்களுடன் முதலாமிடத்தில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது. ஏழு தங்கப் பதக்கங்கள், நான்கு வெள்ளிப் பதக்கங்கள், இரண்டு வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 13 பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் நியூசிலாந்து காணப்படுகின்றது. ஆறு தங்கப் பதக்கங்கள், 13 வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கங்களுடன் 23 மொத்த பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் இங்கிலாந்து காணப்படுகின்றது. இது நேற்று மாலை 5 மணி வரையான நிலவரமாகும்.







ப்ளூ நேவிஸ் சவால் கிண்ணத் தொடர்:

## முதல் போட்டியில் வென்ற நிந்தவூர் முத்தகீன்

■ எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனையில் லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம், தனது 13ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் நடாத்துகின்ற இருபதுக்கு - 20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் மருதமுனை கோஸ்டல் வொரியர்ஸை நிந்தவூர் முத்தகீன்வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வொரியர்ஸ், 20 ஓவர்களில் 126 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு, 127 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய முத்தகீன் 18 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தனர்.

இத்தொடரில் 24 கழகங்கள் பங்குபற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 01 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.